மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின்மூலம் அரிசனங்களுக்கு மட்டும் தான் இப்படி உதவ கூட்டுறவுச் சங்கம் உண்டாக்கப்பட்டிருக்கிறது. தற்போது மதுரையில் ஓடுகின்ற பஸ் மூலம் இலாபம் இருப்பதாகக் கூறப்படுகிறது. வேறு ஒரு பஸ்ஸுக்கும் அரசாங்கம் உதவ வேண்டுமென்று அரசாங்கத்தை 1,50,000 ரூபாய் கேட்டிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது. மற்றும் கோவை மாவட்டத்தில் இப்படி பஸ் விட ஆரம்பித்திருக்கிறார்கள். சில மாவட்டங்களில் பங்குத்தொகையை சேர்த்து வருகிறார்கள்.

திரு. கரு. சீமைச்சாமி: தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையிலே அரிசனங்கள்-பின்தங்கிய மக்கள் பஸ் தொழிலை ஆரம்பித்தால் அரசாங்கம் என்னென்ன உதவிகள் செய்கிறது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, இப்போது அரிசனங்களுக்கு மட்டும்தான் இந்த உதவி செய்யப்பட்டு வருகிறது. பத்தாயிரம் ரூபாய் வரையிலும் அரசாங்கத்தின் பங்குத் தொகையாகக் கொடுத்து வருகிறது.

திரு. மா. பா. சாரதி: தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்தில் டிஸ்ட்ரிக்ட் வெல்பேர் ஆபிசர் மூலம் அரிசனங்கள் பஸ் தொழிலை நடத்த கூட்டுறவு முறையில் பங்குத் தொகை வசூலிக்கப்பட்டிருக்கிறதே, அது எந்த நிலைமையில் இருக்கிறது? எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, இன்னமும் அந்தப் பங்குத் தொகை பூர்த்தியாக்கப்படவில்லை யென்று தகவல் வந்திருக்கிறது. பங்குத் தொகை பூர்த்தியாக்கப்பட்ட பிறகு அதற்கான வேலைகள் தொடங்கப்படும்.

சலவைத் தொழிலாளர்களுக்கும், முடி திருத்தும் தொழிலாளர்களுக்கும் கொடுக்கப்பட்ட கடன்கள்

* 477 வினா—**திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு பின்னிலை வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்த சலவைத் தொழிலாளர்கள், முடி திருத்தும் தொழிலாளர்கள் செலுத்த வேண்டிய கடனை இந்த அரசு தள்ளுபடி செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், எவ்வளவு?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) ஆம்.

(ஆ) ரூ. 2,26,471-95 பை.

1970 மார்ச் 21]

திரு. கோளத்தூர் கோதண்டம்: தலைவர் அவர்களே, இந்தக் கடன் எந்தெந்த மாவட்டங்களில் எவ்வளவு தரப்பட்டிருக்கிறது? எவ்வளவு தள்ளுபடிகள் செய்யப்பட்டிருக்கின்றன? எந்த ஆண்டில் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, பின் தங்கிய மக்களில் முடிதிருத்தும் தொழில், சலவைத் தொழில் பயிற்சிபெற்றுள்ள தகுதியுள்ள வகுப்பினருக்கும், அவர்கள் தங்கள் தொழிலில் நிலையாக ஈடுபடும்படிச் செய்யும் வகையில் கடன் வழங்கும் திட்டம் 1960-ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்தக் கடனுக்கு ஆண்டு ஒன்றுக்கு 5½ சதவித வட்டி உண்டு. இந்தத் திட்டத்தை சில மாறுதல்களுடன் சென்னைமாநகர் நீங்கலாக மாவட்டங்கள் அனைத்திற்கும் 1961-62-ம் ஆண்டில் அரசு விரிவு படுத்தியது. கடன் கொடுக்கப்பட்டுள்ள விவரம்:

வட ஆர்க்காடு மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ. 4,093.10, முடிதிருத்துவோருக்கு ரூ. 4,926.12. செங்கற்பட்டு மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ. 3,250.70, முடிதிருத்து வோருக்கு ரூ. 1,757.00. திருநெல்வேலி மாவட்டம் சலவைத் தொழி லாளருக்கு ரூ. 15,693.78, முடிதிருத்துவோருக்கு ரூ. 7,664.15. தென் ஆர்க்காடு மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ. 19,358.33, முடிதிருத்துவோருக்கு ரூ. 17,821.03. திருச்சி மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ. 5,510.50, முடிதிருத்துவோருக்கு ரூ. 5,583.79. இராமநாதபுரம் மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ. 25,038.83, முடிதிருத்துவோருக்கு ரூ. 23,680.50. கோயம்புத்தூர் மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ. 20,120.20, முடிதிருத்து வோருக்கு ரூ. 15,992.60. சேலம் மாவட்டம் சலவைத் தொழிலா ளருக்கு ரூ. 2,535.80, முடிதிருத்துவோருக்கு ரூ. 3,702.13. தஞ்சா வூர் மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ. 13,761.45, முடி திருத்துவோருக்கு ரூ. 9,681.00. மதுரை மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ. 10,549.42, முடிதிருத்துவோருக்கு ரூ. 8,062.96. கன்னியாகுமரி மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ. 2,400.00, முடிதிருத்துவோருக்கு ரூ. 24.87. உதகமண்டலம் சலவைத் தொழி லாளருக்கு ரூ. 7,700.00, முடிதிருத்துவோருக்கு ரூ. 4,576.00. தரும புரி மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ.1,389.90, முடி திருத்துவோருக்கு ரூ. 2,599.80. ஆக ரூ. 2,26,471.95 கடன் தொகை 1966-67-ம் ஆண்டுகளில் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது.

மதுரை பால் பண்ணையில் தயார் செய்யப்பட்ட வெண்ணெய்

* 478 வினா—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

மதுரை பால் பண்ணையில் 1968-ம் ஆண்டில் பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள வெண்ணெய் கெட்டுப்போய்விட்டது உண்மையா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நெய் விற்பனை குறைந்த தால் நெய் இருப்பு தேக்க மடைந்தது. இதனால் நெய்யின் தரம் கெட்டது.